விலை: 50.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : 16 viber : 076 636 3378

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 205 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 28 செவ்வாய்க்கிழமை (12.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தலைமைஏற்க தயாராக உள்ளேன்

### சஜித் விசேட அறிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசை நிறுவி அதற்கு தலைமை ஏற்கவும் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### சூழ்ச்சிகளுக்கு இடமளியோம்

## ஆட்சியதிகாரத்தை ஏற்பதற்குத் தயார்

### ஜே.வி.பி தலைவர் அநுர



(கொழும்பு)

சூழ்ச்சிகளுக்கு இடமளிக்காமல் ஆட்சியதிகாரத்தை ஏற்பதற்குத் தயாராக உள்ளோம் என ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டா நாட்டை விட்டு தப்பியோட்டம்

## உறுதிப்படுத்தினார் சபாநாயகர்

(கொழும்பு)

**ஜனாதிபதி போட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தம்முடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பஸில் ராஜபக்ஷவும் திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

நேற்று முன்தினம் இரவு கடல் மார்க்கமாக திருகோணமலை சென்ற ஜனாதிபதி கோட்டாபயவும் பஸில் ராஜபக்ஷவும் நேற்று காலை கடற்படைத் தளத்திற்குள் பிரவேசித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று காலை முப்படைத் 15

## வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்றவர்

### மயங்கி விழுந்து மரணம்

(வவுனியா)

வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்று விட்டு இளைப்பாறுவதற்காகச் சென்றவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 5 தினங்களாக பெற்றோல் 15

## அனைத்து அமைச்சர்களும் இராஜினாமா செய்ய முடிவு

### விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அனைத்து அமைச்சர்களும் இணைந்து 15

### எரிவாயுவைப் பெற

## மின் பட்டியல் அவசியமாகும்

### லிட்ரோ அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டை வந்தடைந்த 3700 மெட்ரிக் தொன் சமையல் எரிவா 15

## சர்வகட்சி அரசை அமைக்க ஏகமனதாக தீர்மானம்

### கட்சித் தலைவர் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

சர்வகட்சி ஆட்சியை அமைக்க கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவிவிலகினால் 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் 16

யாழில் எரிபொருள்
விநியோகத்தை சீராக்குவதற்கு
இணைய வசதி அறிமுகம்
15 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப 4 வருடங்கள் தேவை

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நான்கு ஆண்டுகள் தேவை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதாக பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், முதலாவது வருடமே 15

### அரசியல் ஸ்திரமின்மை

## முன்னேற்றத்தை தாமதமாக்கலாம்

### மத்திய வங்கி ஆளுநர்

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காரைநகர் கடற்பரப்பில்

# 6 இந்திய மீனவர்கள் படகுகளுடன் நேற்று கைது

(கொழும்பு)

எல்லைதாண்டி மீன் பிடித்த ஆறு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப் பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் அதிலிருந்த 6 இந்திய மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கைக் கடற்படை யினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்களை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத் துச் சென்றுள்ளனர். (ம)

# சுமந்திரன் பிரதமரானால் சந்தோஷம் அடைவேன்

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(கொழும்பு)

சுமந்திரனை பிரதமராக நியமிப்பது என்றால் உண்மையிலேயே நான் சந்தோஷம் அடைவேன் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

சுமந்திரனை பிரதமராக நியமிப்பது தொடர்பில் பேசப்படுதல் தொடர்பாக நேற்று ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உத்தியோகபூர்வமல்லாத வகையில் சுமந்திரனை பிரதமராக நிய மிக்கலாம் என்று அணுகியநிலையில் அதை எல்லாக் கட்சிகளும் இணைந்து அழைத்தால் தான் அந்த பதவியை ஏற்க முடியும் என கருத்து தெரிவித் திருந்தார்.

இதை சுமந்திரனிற்கு தெரிந்த ஒருவர் என்னிடம் தெரிவித்தார்." சுமந் திரனை பிரதமராக நியமிப்பதென்றால் உண்மையிலேயே நான் சந்தோஷம் அடைவேன். ஏனென்றால் அவர் என்னு டைய மாணவர். பல வருட காலமாக தெரிந்தவர் என்ற வகையில் அதற்கு நான் எதிர்ப்பு அல்ல.

இது பற்றி இணையவழிக் கலந்து ரையாடலில் கூறியதன் காரணமாக இன்று அது பரகசியமாகியுள்ளது. ஆனால் சில விடயங்களை மனதில் வைத்திருக்க வேண்டும். அவர் தன்னு டைய கட்சியினுடைய ஏகோபித்த விருப்பிலா? அல்லது தன்னுடைய தனிப்பட்ட விருப்பில் ஏற்றுக் கொள் வதா? என்பது ஒரு கேள்வி.

தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பிற்பாடு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந் தால், தாங்கள் என்ன காரணத்துக்காக பாராளுமன்றுக்கு கொண்டுவரப்பட் டார்கள் என்பதை மறக்க வேண்டிய நிலை ஏற்படும். காரணம் எந்த நேர மும் மத்திய அரசுடன் இணைந்து வேலையைச் செய்யும்போது மத்திய அரசாங்கத்தினுடைய விருப்பு தாக்கம் செலுத்துவதால் தமிழ் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை மறந்துவிடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படு கின்றது.

நான் நினைக்கின்றேன் எதிர்க்கட் சித் தலைவர் பதவி ஏற்றதன் பின்னர் அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்வில் பல முரண்பாடுகள் ஏற்பட்டது. சம் பந்தனும் அதேபோலவே. சுமந்திரன் இவ்வாறு பதவி ஏற்றுக்கொள்வதா னால் தமிழ்க் கட்சிகள் அனைவரினதும் ஏகோபித்த விருப்பை பெற்றுக்கொண் டால் நல்லது என நினைக்கின்றேன் என்றார். (ம-18,33,104)


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2022

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும்.

| | |
|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | : ரூபா. 1,000.00 |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : 12.07.2022 தொடக்கம் 26.07.2022 |

*(அலுவலக நாட்களில் மு.ப. 9.00 - பி.ப 02.30 மணிவரை)*

| | |
|---|---|
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி | : 26.07.2022 பி.ப. 12.30 வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | : 27.07.2022 முற்பகல் 10.00 மணி வரை |
| கேள்விதிறத்தல் | : 27.07.2022 முற்பகல் 10.00 மணிக்கு |

➢தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - ரூபா. 2,000.00

விண்ணப்பப்படிவங்கள் யாவும் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என முகவரியிடப்பட்டு நானாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 27.07.2022 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் கேள்வித்தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
மாநகரமுதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-4651)


### இடைக்கால ஜனாதிபதியாக சஜித்

# ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏகமனதாக தீர்மானம்



(கொழும்பு)

இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவின் பெயரை முன்மொழிய பிர தான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித் துள்ளது.

கட்சியின் செய லாளர் ரஞ்சித் மத் தும பண்டார இந்தப் பிரேர ணையை சமர்ப் பித்ததாகவும், அதனைக் கட்சி யின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று பிற்பகல் நடைபெற்ற பாராளுமன்றக் குழுவில் உறு திப் படுத் திய தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கிட்டத்தட்ட 50 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது மற்றும் ஒரு பாராளு மன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற அவர்களுக்கு 113 பாராளுமன்ற உறுப் பினர்களின் ஆதரவு தேவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


ஓம் சிவாயநம
நாக கன்னி அம்பாள் துணை





**சித்தன்கேணி அருள்மிகு**

**ஸ்ரீ நாக கன்னி அம்பாள் ஆலயம்**

**தீ மிதிப்பும் தீர்த்தமும்**

**13.07.2022 புதன்கிழமை பகல் 12 மணி**

**கிரியைகளை நிகழ்த்துபவர்**

தேசமான்ய சாமஸ்ரீ சித்தஞானகுரு **இந்திரன் ஐயா**

உதவிக்குரு தேவி உபாசகர் **சுதா ஐயா**

**சைவச்சொற்பொழிவு**

சைவ சின்மயர் க.நித்தியபாபுதரன்

அருட்சொல்வாரி சைவசித்தாந்த கலாநிதி வருணனைக் கலாநிதி

சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் J.P, M.A

**விசேட மேளக்கச்சேரி**

வட்டூர் இராமநாதன் புதல்வர்கள் குழுவினர்

சித்தன்கேணி கண்ணன் குழுவினர்

சித்தஞானகுரு இந்திரன் ஐயாவும்
உபயகாரர்களும் தொண்டர்களும்

(C-4652)


# கொரோனாத் தொற்று மேலும் ஒருவர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்று காரணமாக மேலும் ஒரு மரணம் பதிவாகியுள்ள தாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

அந்த வகையில், 60 வய துக்கு மேற்பட்ட பெண் ஒரு வரே இவ்வாறு கொரோனா தொற்று காரணமாக உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவ வேண்டும்

## காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வலியுறுத்து

**(டில்லி)**
**இலங்கைக்கு சர்வதேச சமூகம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் நிலவும் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து காங்கிரஸ் கட்சி உன்னிப்பாக கவனித்து வருகிறது.



பொருளாதார நெருக்கடியால் உணவுப் பற்றாக்குறை, எரிபொருள், அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இலங்கை மக்களின் ஒருமைப்பாட்டுக்கு நெருக்கடி ஏற்பட்ட நிலையில் அதிலிருந்து மீண்டு வர வேண்டும்.

இலங்கை அரசு மற்றும் மக்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து உதவி வழங்கும் என நம்புகிறேன்.

தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை மீண்டு வரும் என எதிர்பார்க்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இந்தியக் கடன்திட்டத்தில் இலங்கைக்கு யூரியா உரம்



(கொழும்பு)
இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைத்த யூரியா உரத்தின் இருப்பு நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் தலைமையில் உரம் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.


இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது. (நி)

# அனைத்துக்கட்சி அரசமைப்பதில் போராட்டக்காரர்களும் ஈடுபடவேண்டும்

## அத்துரேலிய ரத்ன தேரர் அழைப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி பதவி விலகுவதற்கு வழிவகுத்ததால் அனைத்துக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதில் போராட்டக்கார்கர்ளும் ஈடுபட வேண்டும் என அத்துரேலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.



இதே வேளை, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க 13 ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், 13 ஆம் திகதிக்குப் பின்னர் அமுல்படுத்துவதற்கான தீர்மானங்களை இப்போதே எட்ட முடியும் என தெரிவித்தார். (நி)

# 24 மணிநேரமும் எரிபொருள் கொண்டு செல்ல தயார்

## பெற்றோலிய தனியார் தாங்கி சாரதிகள்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் உள்ள சிலோன் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 24 மணி நேரமும் எரிபொருளைக் கொண்டு செல்வதற்கு இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி சாரதிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டுமே சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கொண்டு செல்லப்படும் என சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது 90% முதல் 95% வரை எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் இன்றி மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியப் படைகள் இலங்கையிலா?

## மறுக்கும் இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)
இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்புவதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை நிராகரிப்பதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் டுவிட்டர் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளது.

மேலும், இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனநாயக அமைப்புகள் ,மதிப்புகள் மற்றும் அரசியலமைப்பு கட்டமைப்பின் மூலம் செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை விரும்பும் இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கிறது என்று உயர்ஸ்தானிகர் அலுவலகம் அறிவித்துள்ளது. (நி)

# நாட்டை கட்டியெழுப்ப தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
"ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட "மொட்டு" அரசின் மக்கள் ஆணை முடிந்துவிட்டது. அவர்கள் இந்த அழகான தீவை அழித்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் நாங்கள் தயார்." என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பங்களிக்கவும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசை நியமிப்பதற்கு நாம் தயார்.

இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக யாராவது பாராளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயலாகும். நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் எமக்கு ஒத்துழைக்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார். (நி)

# தனுஷ்கோடி மணல் திட்டில் இருந்து 6 இலங்கையர்கள் மீட்பு

(சென்னை)
இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற ஆறு பேர் தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள மணல் திட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு படகு மூலம் அழைத்துச் செல்வதாக கூறி அழைத்துச் சென்றவர்கள் தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள மணல் திட்டில் அவர்களை இறக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை குறித்த மணல் திட்டில் இவர்களை கண்டவர்கள் தமிழக கடலோர பொலிஸாருக்கு அறிவித்தமையை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் அவர்களை மீட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது மண்டபம் அகதிகள் முகாமில் தங்க [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதி பதவிக்கு அநுர பெயரை முன்மொழியும் பெரமுன உறுப்பினர்கள்

(கொழும்பு)
ஜனாதிபதி வேட்பாளராக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு முன்மொழியவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது. இதேநேரம், ஜனாதிபதி பதவிக்கு பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் சரத் பொன்சேகா ஆகியோரின் பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ லங்கா கிரிக்கெட் பிரிவு III-2022

# தகுதிகாண் போட்டியில் டிறிபேர்க்ஸ்ரரார் அணி வெற்றி



ஸ்ரீ லங்கா கிரிக்கெட் பிரிவு III கிரிக்கெட் தொடரின் 3 ஆவது தகுதி காண் போட்டி கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. போட்டியில் டிறிபேர்க்ஸ்ரார் அணி நியூஸ்ரார் அணியை 89 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸ்ரார் அணி களத்தடுப்பை மேற்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேர்க்ஸ்ரார் அணி 43.4 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் G. தர்ஸன்-52, சுகிர்தன்-46, M.தர்ஸன்-39,சாகித்தியன்-28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிசோக்குமார் 10 ஓவர்களில் 60 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் விஜிய் 7 ஓவர்களில் 46 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 44 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.

டான்சன்-45,பிரசாத்-37, விஜிய்-25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிறிபேர்க்ஸ்ரார் அணியைச் சார்ந்த தர்ஸன் 7 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், றஜீஸ் 9 ஓவர்களில் 30 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், சங்கீதன் 10 ஓவர்களில் 36 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றிஸ் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 வருட காலமாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் டிறிபேர்க்ஸ்ரார் அணி 9.87 புள்ளிகளையும் நியூஸ்ரார் அணி 3.09 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-4)

## கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

### மூன்றாம் நாள் போட்டி சமநிலையில் முடிவு





வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாம் நாள் போட்டி நேற்று முன்தினம் 4 மணிக்கு ஆரம்பமாகியது.

குறித்த போட்டி கொலின்ஸ் ஸ்ரைக்கேஸ் அணியினருக்கும் D9 FC அணியினருக்கும் இடையில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் சமபலத்துடன் பலப்பரீட்சை நடத்தியது. ஆயினும் எந்தவித கோல்களையும் இரு அணிகளும் பெறாத நிலையில் போட்டியானது சமநிலையில் முடிவானது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2662

### கம்சா




### பிரதாப்




### சாளினி




### றமேஷ்




### சாக்சவி




### கோபி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்... www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொருளாதார நெருக்கடிகளுக்கு கொரோனாதான் காரணமாம்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி உத்தியோக பூர்வமாக பதவி விலகிய ஒரு வாரத்திற்குள் புதிய கட்சி கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன வெளி நாட்டு ஊடகத்துக்கு தெரி வித்துள்ளார்.

மேலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு கொரோனாவே பிரதான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"கோவிட் தொற்றுநோய் நாட்டில் பொருளாதார ரீதியாக பேரழிவை உருவாக்கியுள்ளது என்றும் எங்கள் பணத்தை தடுப்பூசிகளுக்காக செலவிட வேண்டியிருந்தது" எனவும் அவர் அந்த ஊடகத்துக்கு குறிப்பிட்டுள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

## அமரர். யோகதாஸ் அசோக்காந்

(பிரதி அதிபர் யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்)



தோற்றம் - 1980.04.14 மறைவு - 08.07.2022

அல்வாய் அம்பிகையைப் பிறப்பிடமாகவும், அல்வாய் இந்திரபிரஸ்தத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோகதாஸ் அசோக்காந் அவர்கள் கடந்த (08.07.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் யோகதாஸ் ஜெகதாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், ஜெயவீரசிங்கம் இரத்தினகுமாரி தம்பதிகளின் மூத்த மருமகனும், இந்திராவின் அன்புக் கணவரும், அஷ்விகாவின் பாசமிகு தந்தையும், ரஜனிகாந் (மதுவரித் திணைக்களம், முல்லைத்தீவு), ஜான்சிராணி (லண்டன்), அருண் (இ.போ.ச.கிளிநொச்சி), ரபேக்கா (கனடா), கீர்த்தனா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகாந்தன்(லண்டன்), பிரதீப் (கனடா), வள்ளிமயில், ரம்யா (ஆசிரியை), கிருஷிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபேந்திரா, அச்சுதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும், அகிலன் (சமுர்த்தி உத்தியோகத்தர்,பிரதேசசெயலகம், பருத்தித்துறை) அவர்களின் மருமகனும், தெய்வாம்பிகை, இராசாம்பிகை (சுவிஸ்), ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.07.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-4595)

தகவல்- குடும்பத்தினர்
யோ. ரஜனிகாந் 077 201 3275
ச.செல்வானந்தன் (அதிபர் யா/ தேவரையாளி இ. கல்லூரி) 077 6529 036
இந்திரப்பிரஸ்தம், அல்வாய்.

# இராசிபலன்

12.07.2022
ஆனி 28, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 3.15 மணிவரை

மூலம் பின்னிரவு 2.05 மணிவரை
சுப நேரம் -10.29-11.59 மணிவரை
இராகு காலம் -2.59-4.29 மணிவரை

அமிர்தசித்தம்,நயினை நாகபூசணி தேர்
சந்திராஷ்டமம்- கார்த்திகை

வளவன்




பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.




பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெறலாம், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,போசன சுகமுண்டு.




குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




குடும்பத்தினர், நண்பர்களிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.




நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், அனைத்திலும் வெற்றிபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு.




செவி குளிரும் செய்திகள் வந்துசேரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் , இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் , கடன்சுமை குறையும் நாள்.




சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள்,எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கட்டுப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ராணி புகையிரத சேவை நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான யாழ்ராணி தொடரூந்து சேவை நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல்நகர் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இச்சேவையை புகையிரத திணைக்களம் மேற்கொண்டுள்ளது.
(நி-6-33-100-316)



# யாழில் சூடுபிடித்துள்ள றம்புட்டான் பழ வியாபாரம்



(குப்பிழான்)
யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது றம்புட்டான் பழ வியாபாரம் சூடுபிடித்துள்ளதால் பல இடங்களிலும் றம்புட்டான் பழங்கள் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

யாழில் தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவி வரும் நிலையில் றம்புட்டான் பழங்களைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வத்துடன் வாங்குவதனை அவதானிக்க முடிகின்றது.
(நி-6-18)

# பாலின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
இம்மாதம் 15 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலை 170 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.(நி-6)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் ஏழாவது மாநாடு

(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் ஏழாவது மாநாடு "புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதல் (Transforming Business for Resilience in new normal) என்ற தொனிப் பொருளில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முகாமைத்துவ கற்கைகள் பீடத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன் நேரலை நிகழ்வு http://iccm.maco.jfn.ac.lk என்ற தளத்தில் பார்வையிடலாம். (நி-6)

# நெல்லியடிப் பகுதியில் பூட்டுடைத்து திருடப்பட்ட துவிச்சக்கரவண்டி

(கரணவாய்)
நெல்லியடி நகர்ப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் பூட்டு உடைத்து களவாடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில் குறித்த நபர் யாழ்ப்பாணம் செல்வதற்காக நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்தில் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி பூட்டி விட்டு சென்று திரும்பி வந்து பார்த்த போதே குறித்த வண்டி களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்தது. (6)



சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலையின் 27 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

# காங்கேசன்துறை-தமிழகம் கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
தென்னிலங்கையில் ஏற்படுகின்ற அரசியல் குழப்பங்களும் அரசியல் மாற்றங்களும், எமது மக்கள் நலச் செயற்பாடுகளில் எந்தவிதமான மாற்றத்தினையும் ஏற்படுத்தாது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான யாழ் ராணி புகையிரத சேவை நேற்று திங்கட்கிழமை காலை ஆரம்பிக்கப்பிக்கப்பட்டது.

தற்போது புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது போன்று, விரைவில் தமிழகத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்கு கப்பல் சேவையும், பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கான விமான சேவையும் இடம்பெறும்எனதெரிவித்தார்.(நி-6-33)



சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 14 ஆவது ஆண்டு குருபூசை தினமான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் துர்க்கா தேவி ஆலய வளாக அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஈழத்தின் மூத்த சிவாச்சாரியார்கள் நால்வர் "மூத்த சிவாச்சாரியார்" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (படம்: ரவிசாந்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 250 | 220 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 400 | 600 |
| தக்காளி | 250 | 300 | 280 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 320 | 280 | 200 |
| கோவா | 360 | 330 | 320 | 400 |
| கரட் | 300 | 350 | 370 | 400 |
| பூசணி | 240 | 240 | 240 | 300 |
| புடோல் | 180 | 160 | 200 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 210 | 200 | 240 |
| பாகற்காய் | 300 | 350 | 400 | 600 |
| வெண்டக்காய் | 120 | 160 | 140 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 220 | 200 | 250 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 280 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 260 | 280 | 280 | 360 |
| கறிமிளகாய் | 400 | 550 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 450 | 450 | 380 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | — | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 250 | 350 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-80 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 180 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் நிகழ வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தல்

**(கொழும்பு)**
**இலங்கையில் அனைத்துக்கட்சிகளும் இணைந்து புதிய ஆட்சியை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இலங்கையுடன் அமெரிக்கா துணை நிற்பதாக அந்நாட்டிற்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் நடந்து வரும் அரசியல் முன்னேற்றங்களை அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இலங்கையின் வரலாற்றில் பலவீனமான இந்த தருணத்தில் அனைத்து தரப்பினரும் நிதானத்துடன் செயற்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.



அமைதியான மற்றும் ஜனநாயக முறையில் ஆட்சி மாற்றம் நடைபெற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் அரசியலமைப்பு ரீதியாக தேர்ந்தெடுக்கப்படும் புதிய அரசு விரைந்து செயற்பட்டு கடன் நெருக்கடிக்கு தீர்வு காண்பதுடன், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் கூடிய திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்றும் அமெரிக்க தூதர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் குடைசாய்ந்த வாகனம்

(பதுளை)
அப்புத்தளை பகுதியில் 33 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிச்சென்ற எரிபொருள் தாங்கியொன்று குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

திருக்கோணமலை ஐ.ஓ.சி. எரிபொருள் முனையத்தில் இருந்து அப்புத்தளைக்கு டீசலை ஏற்றிச்சென்ற எரிபொருள் தாங்கியே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் எரிபொருள் தாங்கியில் இருந்த டீசல் முற்றாக வீண்விரயமானதுடன் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 77 பேர் கைது

(மட்டக்களப்பு)
இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு சட்ட விரோதமாக பயணம் செய்தவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு - களுவங்கேணி கடற்கரையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு இயந்திர படகில் சட்ட விரோதமாக பயணித்த 77 பேரையே நேற்று அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவர் உட்பட 17 பேரை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஏனைய 60 பேரை படகுடன் திருகோணமலை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய நேற்று அதிகாலை 2 மணியளவில் மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடற்பகுதியில் பயணிக்கும் போதே சுற்றிவளைத்து இயந்திர படகை கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: QS, TO<br>எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/10173 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 10 சூரி 3 செவ் 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBA கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: அவுஸ்திரேலியா நியூசிலாந்து மட்டும்<br>தொ.இ:G/10632 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 42 சூரி 12 செவ் 8 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10188 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 30 ½ சூரி, செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L தந்தையுடன் கடை நடத்துகிறார்.<br>எதிர்பார்ப்பு: தனியார் நிரந்தர, அரசதொழில்<br>தொ.இ: G/10643 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 11 சூரி 11 செவ் 04 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L கடை<br>எதிர்பார்ப்பு: தொழிலுள்ள பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10193 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 6 சூரி 12 செவ் 5 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர் விவாகரத்துப் பெற்ற, பிள்ளைகள் இல்லாத மணமகன்<br>தொ.இ:G/10651 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்.: சித்திரை 3<br>கி.பா: 12 ¼ சூரி 3 செவ் 4 இல்<br>உயரம்: 170 cm<br>தகைமை/தொழில்: BFA பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10195 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 31 ¾ சூரி 1 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது உத்தியோகம்<br>தொ.இ:G/10658 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# அநுரகுமாரவை சந்தித்த சம்பிக்க



(கொழும்பு)
தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் பிரதிநிதிகள் குழு நேற்றுக் காலை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பானது பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்றிருந்தது.

சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (நி)

# ஜனாதிபதி தொடர்பான செய்திகளை சபாநாயகர் மட்டுமே வெளியிடுவார்



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செய்திகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மட்டுமே வெளி யிடுவார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள 'அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அறிவித்தபடி பதவி விலகுவதாக ஜனாதிபதி பிரதமருக்கு தெரியப்படுத்தியதாக பிரதமர் அலுவலகம் நேற்று காலை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 92

# பிரதிபலன் பாராது உதவுவோம்



படகு ஒன்றுக்கு வர்ணப் பூச்சு அடிப்பதற்கான பொறுப்பு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

படகு உரிமையாளர் வேண்டிக் கொண்டதைப் போலவே பிரகாசமான சிவப்பு நிறத்தில் வர்ணப்பூச்சு அடித்துக் கொடுத்தார்.

வர்ணப் பூச்சு அடித்துக் கொண்டிருக்கும் போது அந்தப் படகில் ஒரு சிறிய ஓட்டை இருப்பதை கவனித்து, உடனடியாகவே அந்த ஓட்டையை சரிவர அடைத்தும் விட்டார்.

வேலை முடிந்ததும் அவர் தனக்குரிய கூலியை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்.

அடுத்த நாள் படகின் உரிமையாளர் அந்த பெயின்டரின் வீடு தேடி வந்து ஒரு மதிப்பு மிக்க காசோலையை கொடுத்தார். அது அவர் ஏற்கனவே கூலியாக வழங்கிய தொகையைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிகமானது.

பெயின்டருக்கோ அதிர்ச்சி. நீங்கள் தான் ஏற்கனவே பேசிய கூலியைத் தந்துவிட்டீர்களே? எதற்காக மீண்டும் இவ்வளவு பணம் தருகிறீர்கள்? எனக் கேட்டார்.

" இல்லை. இது பெயின்ட் அடித்ததற்கான கூலி அல்ல. படகில் இருந்த ஓட்டையை அடைத்ததற்கான பரிசு" என்றார் படகின் உரிமையாளர்.

" இல்லை, சார்... அது ஒரு சிறிய வேலை. அதற்காக இவ்வளவு பெரிய தொகைப் பணத்தை தருவதெல்லாம் நியாயமாகாது. தயவுசெய்து காசோலையை கொண்டு செல்லுங்கள்" என்றார் பெயின்டர்.

" நண்பரே... உங்களுக்கு விடயம் புரியவில்லை. நடந்த விடயத்தைச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று சொல்லி விட்டு படகு உரிமையாளர் தொடர்ந்தார்.

" நான் உங்களை படகுக்கு பெயின்ட் அடிக்கச் சொல்லும் போது அதில் இருந்த ஓட்டையைப் பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன்.

பெயின்ட் அடித்துவிட்டு நீங்களும் போய்விட்டீர்கள். அது காய்ந்த பிறகு எனது பிள்ளைகள் படகை எடுத்துக் கொண்டு மீன் பிடிக்கக் கிளம்பிவிட்டார்கள்.

படகில் ஓட்டை இருந்த விடயம் அவர்களுக்குத் தெரியாது. நான் அந்த நேரத்தில் அங்கு இருக்கவுமில்லை.

நான் வந்து பார்த்த போது படகைக் காணவில்லை. படகில் ஓட்டை இருந்த விடயம் அப்போதுதான் நினைவுக்கு வர நான் பதறிப் போய்விட்டேன்.

கரையை நோக்கி ஓடினேன். ஆனால் எனது பிள்ளைகளோ மீன் பிடித்து விட்டு மகிழ்ச்சியாக திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கணம் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் அளவேயில்லை.

உடனே படகில் ஏறி ஓட்டையைப் பார்த்தேன். அது நேர்த்தியாக அடைக்கப்பட்டிருந்தது. இப்போது சொல்லுங்கள். நீங்கள் செய்தது பெறுமதியற்ற சிறியதொரு வேலையா? நீங்கள் என்னுடைய பிள்ளைகளின் விலைமதிக்க முடியாத உயிர்களையல்லவா காப்பாற்றியிருக்கிறீர்கள்? உங்களது இந்தச் "சிறிய" நற்செயலுக்காக நான் எவ்வளவுதான் பணம் தந்தாலும் ஈடாகாது." என்றார்.

நண்பர்களே... இதிலிருந்து என்ன புரிகிறது. யாருக்கு எங்கே எப்போது எப்படி என்றெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. நமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிரதிபலன் பாராது உதவுவோம். பிறரின் கண்ணீரைத் துடைப்போம். நம்கண் முன்னே தெரியும் ஓட்டைகளை கவனமாக அடைப்போம். அப்போதுதான் நமது ஓட்டைகளை அடைப்பதற்கான மனிதர்களை இறைவன் அறியாப் புறத்திலிருந்து நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்பார்.



Sinthu Sinthu

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# ரஷ்ய தாக்குதல் 15 உக்ரைனியர்கள் பலி

## பலர் இடிபாடுகளுக்குள்



(கீவ்)

கிழக்கு உக்ரைனில் உள்ள சாசிவ்யார் நகரில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது ரஷ்ய எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது 15 பேர் வரை கொல்லப்பட்டனர்.

குழந்தை ஒன்று உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்குண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இடிபாடுகளுக்குள் இருந்து சிலர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் உக்ரைனிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரஷ்ய உராகன் எறிகணைகள் மூலமே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலாடிமிர் ஜெலன்ஸ்கி குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# பிரித்தானியாவின் அடுத்த பிரதமர் தேர்வுக்கான போட்டி தீவிரம்



(லண்டன்)

போரிஸ் ஜோன்சனுக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் நெருக்கடிக்குப் பின்னர் அவர் கடந்த வியாழக்கிழமை பதவி விலகுவதாக அறிவித்தார்.

இந்நிலையில் தற்போது அவர் ஆளும் கட்சித் தலைமை பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அதற்கு முன்னதாக அவரது அமைச்சரவையைச் சேர்ந்த மூத்த அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகியிருந்தனர்.

[illegible] வரை ஜோன்சன் காபந்து அரசின் பிரதமராகப் பொறுப்பேற்கத் திட்டமிடுகிறார்.

இருப்பினும் அவர் உடனடியாக விலகிக்கொள்ள வேண்டும் என்றும் அவருக்குப் பதிலாகத் துணைப் பிரதமர் டோமினிக் ராப் காபந்து பிரதமராகப் பொறுப்பேற்க வேண்டுமென்றும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கன்சர்வேட்டிவ் கட்சித் தலைமைத்துவப் போட்டிக்கான கால அட்டவணை அடுத்த வாரம் உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதத்துக்குள் பிரிட்டனின் அடுத்த பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டன் பிரதமர் நாட்டின் 68 மில்லியன் மக்களாலும் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவதில்லை. பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களை வென்ற கட்சியினாலேயே தேர்வு செய்யப்படுகிறது. 2019 தேர்தலில் பெரு வெற்றி பெற்ற கன்சர்வேட்டில் கட்சியே புதிய பிரதமரை தேர்வு செய்யவுள்ளது.

இதன்படி கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரே அடுத்த பிரதமராக நியமிக்கப்படவுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிநாடு

## அமெரிக்கா- ஈரான் இடையே தொடரும் பதற்றம்

# போர் வெடிக்கும் அபாயம்

(வோஷிங்டன்)

**ஈரான் அமெரிக்காவிற்கு பாரிய அச்சுறுத்தலை விளைவிக்கும் ஒரு நாடாக மாறி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**



ஈரானின் அணு உற்பத்தி காரணமாக அமெரிக்கா பொருளாதார தடையினை ஈரான் மீது விதித்திருந்தது.

பொருளாதார தடையினால் கோபமடைந்த ஈரான் யுரேனியம் உற்பத்தியை ஆரம்பித்திருந்தது.

இதையடுத்து, அமெரிக்கா ஈரான் வெளியுறவு துறை அமைச்சர் 'ஒசைன் அமிர் அப்துல்லைன்' அவர்களை சந்திக்க இரண்டு நாள் பயணம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில், ஈரான் மேற்படி சந்திப்பு குறித்து அதிக ஆர்வம் காட்டவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அறிவிப்பு குறித்து கருத்து வெளியிட்ட ஈரான் வெளியுறவு அமைச்சர்,

அமெரிக்காவின் இராஜதந்திர நகர்வு குறித்து நாம் விழிப்பாக இருக்கின்றோம்.

அமெரிக்கா எம்முடன் என்ன பேசப் போகின்றார்கள் என்பது எமக்கு தெரிந்துவிட்டது.

இந்த சந்திப்பில் எமக்கு எந்தவித நன்மையும் கிட்டப் போவதில்லை என அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலை தொடரும் பட்சத்தில் அமெரிக்கா மற்றும் ஈரானுக்கிடையில் போர் வெடிக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாக சர்வதேச செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (நி)

## கடன் வழங்குநர்களிடம் கையேந்தும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்லுகின்ற நிலையில், சர்வதேச அமைப்புக்கள் தமது உதவியை தாமதப்படுத்தி வருகின்றன.

இந்த சூழலில் பாகிஸ் தான், சர்வதேச தனியார் கடன் வழங்குநர்களை தேடி வருவதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன்.

தற்போதைய நிலையில் சுமார் 5.5 டிரில்லியன் பாகிஸ்தான் ரூபாய்கள் உடனடியாக தேவைப்படுவதாகவும் இந்த தொகையினை 'எந்த சர்வதேச அமைப்பினாலும் உதவியாக தர முடியாது' என்ற நிலை காணப்படுவதனால் தனியார் கடன் வழங்குநர்களைத்தேட ஆரம்பித்துள்ளதாக பாகிஸ்தான் செய்தி கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதி யம் பாகிஸ்தானுக்கு உதவி வழங்குவதற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ள நிலையில், அந்த நிபந்தனைகளை பாகிஸ்தான் இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை எனக் கூறப்படுகின்றது. (நி)

## சீனாவுடன் கைகோர்க்கும் பாகிஸ்தான்

### இந்தியாவிற்கு அச்சுறுத்தல்

(டில்லி)

இந்திய பெருங்கடல் பகுதியை கைவசப்படுத்த சீனா கடும் முயற்சிகளை எடுத்து வரும் நிலையில், தற்போது சீனா தனக்கு துணையாக பாகிஸ்தானையும் அழைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் சீனா மற்றும் பாகிஸ்தானுக்கிடையில் கடற்பிராந்திய கூட்டுப் பயிற்சி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் படி, இந்திய பெருங்கடலின் எல்லைப் புறமான அரேபியன் கடற்பகுதியில், மேற்படி கூட்டு இராணுவப் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனாவின் தயாரிப்பில் பாகிஸ்தானுக்கு எதிர்வரும் 23 ஆம்திகதிவழங்கப்படவுள்ள தைமூர் என்ற போர்க் கப்பலும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கவுள்ளதாக பாகிஸ்தானை மையப்படுத்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கொள்ளப்படவுள்ள கூட்டு இராணுவப்பயிற்சி மூலம் இந்திய பெருங்கடலுக்கும் மற்றும் இந்தியாவின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## போர்த்துக்கல்லில்

# கட்டுக்கடங்காத காட்டுத்தீ

(இத்தாலி)

வடக்கு மற்றும் மத்திய போர்த்துகல் முழுவதும் பரவிவரும் காட்டுத்தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு படையினர் கடுமையாக போராடி வருகின்றனர்.

தீயைக் கட்டுப்படுத்த 3,000 தீயணைப்பு வீரர்கள் மற்றும் 60 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் முதல் பல பகுதிகளில் தீ எரிந்து வருகிறது. வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கிட்டத்தட்ட 250 புதிய தீ விபத்துகள் ஏற்பட்டன. (நி)

## இளம் வயதில் அதிக சாதனை

## கறுப்பின பெண்ணுக்கு அமெரிக்காவின் உயரிய விருது

(வோஷிங்டன்)

அமெரிக்க நாட்டின் உயரிய விருதான 'சுதந்திரத்துக்கான ஜனாதிபதி விருது' ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை சிமோன் பைல்ஸ்க்கு வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் அரசியல், சமூகம், கலை, விளையாட்டு என பல்வேறு துறைகள் வாயிலாக நாட்டின் மேம்பாட்டிற்கு சிறந்த பங்களிப்பை வழங்கும் நபர்களுக்கு அந்த நாட்டின் உயரிய விருதான "சுதந்திரத்துக்கான ஜனாதிபதி விருது" ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.



இந்த நிலையில் இந்த ஆண்டுக்கான விருது பெறும் நபர்களை வெள்ளை மாளிகை அண்மையில் அறிவித்தது. அதை தொடர்ந்து அண்மையில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற விழாவில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு ஜனாதிபதி ஜோ பைடன் பதக்கங்களை அணிவித்து கௌரவித்தார்.

அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக இந்த உயரிய விருது, 25 வயதே ஆன அமெரிக்காவின் ஒலிம்பிக் வீராங்கனை சிமோன் பைல்ஸ்க்கு வழங்கப்பட்டது. கறுப்பினத்தைச் சேர்ந்த சிமோன் பைல்ஸ் 7 ஒலிம்பிக் பதக்கங்கள், உலகளவில் ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் அதிக தங்க பதக்கங்கள் என இளம் வயதிலேயே அதிக சாதனை நிகழ்த்தியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தை வைத்திருக்க முயற்சித்தால் நாட்டில் இரத்தக்களரி ஏற்படும்

## உலப்பனே சுமங்களதேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உடனடியாக ஆட்சி அதிகார பலத்தில் இருந்து விலகி, சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க இடமளிக்க வேண்டும் என்று உலப்பனே சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று அஸ்கிரிய மாநாயக்க தேரரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசியல் தந்திரங்கள் மூலம் அதிகாரத்தை வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டாம். தொடர்ந்தும் இப்படி செய்தால், நாட்டில் இரத்த களரி ஏற்படும்.

இதனால், ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருக்க முயற்சிக்கும் இரட்டை குடியுரிமை பெற்ற நபருக்கு(பசில் ராஜபக்ஷ) அரசியல் சூதாட்டத்தை நிறுத்துங்கள் எனக் கூறிக்கொள்கிறோம்.

இதனால், அவர்கள் ஆட்சி அதிகார பலத்தில் இருந்து உடனடியாக விலகி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாங்கள் பொது மக்களின் பலத்தை அன்று கொழும்பில் காட்டினோம்.

இதற்கு அப்பால் சென்று எமது பலத்தை காட்ட தயங்க மாட்டோம் என்பதை குறிப்பாக பசில் ராஜபக்ஷவுக்கு கூறி வைக்க விரும்புகிறோம் என



சுமங்கள தேரர் தெரிவித்தார். (நி)

## சிறுபோக அறுவடைக்கான எரிபொருளினை விரைவாக தாருங்கள்

### அம்பலப்பெருமாள்குள விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடை செய்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்ட நிலையில் தற்போது அறுவடை மேற்கொள்வதற்கு எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாததன் காரணமாக விவசாயிகள் அறுவடை எவ்வாறு மேற்கொள்வது என தெரியாத நிலையில் உள்ளனர்.

மாவட்டத்திற்குள் வருகின்ற எரிபொருள் விவசாயிகளுக்கு முதன்மையாக பகிர்ந்தளிக்கப்படும் என மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ள நிலையில் அறுவடை தொடங்கி உள்ள அம்பலப்பெருமாள் கிராமத்தில் எரிபொருளினைப் பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

## சித்தங்கேணி நாககன்னி அம்பாள் தீ மிதிப்பு திருவிழா

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி அருள் மிகு ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலய தீ மிதிப்பு திருவிழா நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை மதியம் 12 மணிக்கு ஆலயத்தில் பூசைவழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம்பெறும். (நி-6)

## பூநகரி கோட்டக்கல்வி அலுவலக திறப்பு விழா

(பூநகரி)

பூநகரி கோட்டக்கல்வி அலுவலக திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூநகரி வாடியடி மட்டுவில் நாடு மகேஸ்வரி வித்தியாலயத்தில் பூநகரி-கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.கணேஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-84)

## எரிபொருள் கப்பலுக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன

### அமைச்சர் காஞ்சன டுவிட்

(கொழும்பு)

எதிர்வரும் 15-17 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வரவுள்ள டீசல் கப்பலுக்கான முழுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 22-24 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வரவுள்ள பெற்றோல் கப்பலுக்கான முழுப் பணமும் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## எரிபொருள் அட்டை ஊடாக விநியோகம் முன்னெடுப்பு



(மன்னார்)

மன்னார் நகர பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு எரிபொருள் அட்டையின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள IOC எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகம் மோட்டார் சைக்கிள்களுக்கு 2000 ரூபாவிற்கும் முச்சக்கர வண்டிக்கு 2500 ரூபாவிற்கும் கார்களுக்கு 5000 ரூபாவிற்கும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.

நேற்றைய தினம் வழங்கப்படாத கிராமங்களுக்கு அடுத்தகட்ட எரிபொருள் வழங்கலின் போது வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி-6-285)

## தும்பளையில் கைப்பற்றிய எரிபொருட்களை விற்பனை செய்து பணத்தை ஒப்படைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு

(கரணவாய்)

அளவுக்கதிமாக வீட்டில் வைத்திருந்த டீசல் மற்றும் மண்ணெண்ணையை, புலோலி எரிபொருள் நிலையத்திற்கு வழங்கி அதனை விற்பனை செய்து பணத்தை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் பருத்தித்துறை தும்பளையில் உள்ள வீடொன்றில் அளவுக்கதிகமாக டீசல் மற்றும்மண்ணெண்ணெய் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த எரிபொருளினையும் சந்தேக நபரையும்பருத்தித்துறை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேகநபரை பொலிஸ் பிணையில் விடுவிக்க வழக்கு பதிவுசெய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. இதன் போது பருத்தித் துறை பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 394.5 லீற்றர் டீசல் மற்றும் 194.5 லீற்றர் மண்ணெண்ணையும் மன்றில் சமர்பிக்கப்பட்டது.

குறித்த வழக்கை விசாரித்த மேலதிக நீதிவான் எரிபொருட்களை நீதிமன்றின் களஞ்சிய அறையில் பாதுகாக்க முடியாது. எனவே புலோலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒப்படைத்து விற்பனை செய்த பணத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன், சந்தேக நபரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளனர். (நி-6-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி வருகிறாள் நாகபூஷணி



வட இலங்கையிலேயே வரலாற்று மகிமையும் வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பட்ட சப்த தீவுகளிலே மணிபல்லவம் எனப்படும் தனிப்பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. ஆங்கு அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளபதியே, நயினையம்பதியாகும். சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் புவனேஸ்வரி பீடம் எனும் தனிச் சிறப்பை அன்னையவள் பெற்று விளங்குகிறாள். அம்பிகையின் மூல விக்கிரகத் தோற்றம், அதன் வரலாறு என்பன இன்னமும் கண்டறிய முடியாத அதிசயமாகவே காணப்படுகின்றன.

நயினை நாகபூசணி அம்பிகையின் அருளாசி தனிச்சிறப்பானது. தாய்மையுற, மும்மலங்களின் தீமைகள் போயகல வழிப்படுத்துவது பக்தியோடு அடியவர்கள் கூடி நின்று அம்பிகையின் சந்தம் இசைத்திட இன்பநிலை தருவது மண்ணில் நல்ல வண்ணம் வாழ நற்கருமங்களில் பொருள் பேசுவது. நம்பிக்கையோடு வழிபாடு இயற்றும் அடியவர்களது துன்பங்களையும் நோய் நொடிகளையும் நீக்கியருளும் சக்தியாகவும் குழந்தைப் பேறு இல்லாதோர்க்கு குழந்தைப்பேறு அளிக்கும் பேரருள்சக்தியாக அன்னை நாகபூஷணி அருளாசி புரிகிறாள். ஆலய கிழக்கு வாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரத்தை கொண்டமைந்துள்ளதுடன் ஆலயத்திற்கு அலைகடல் தாண்டி வருகை தருகின்ற அடியவர்களுக்கு பக்தியின் பரவசத்தை உவந்தளிக்கின்றன.

### நாகபூஷணி என பெயர் வரக்காரணம்

நயினாதீவிற்கு அண்மிதமாக அனலைதீவு என்னும் ஓர் அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் சிறிய தீவு அமைந்துள்ளது. அங்கு வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் ஒன்று உண்டு. அந்த ஆலயத்திலிருந்து நாகபாம்பு பூக்களைக் கொண்டு வந்து அம்மனை பூசித்ததாக வர்லாறுகள் கூறுகின்றன. இவ்வாறு நாகம் பூசித்து வந்தமையால் நாகபூஷணி என்னும் பெயர் வழங்கப் பெற்றது.

### பாம்பு சுற்றிய கல், கருடன் கல் வரலாறு


ஆலயத்தின் வரலாற்றுச் சின்னமாக ஆலய வடக்கு கடல் பகுதியில் இரு கற்கள் காணப்படுகின்றன. அதில் ஒரு கல் பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றைய கல் கருடன் கல் எனவும் அழைக்கப்படுகின்றன. நாகபாம்பு அம்மனுக்கு பூக்கள் கொண்டு வந்தவேளை கருடன் பாம்பை இடைமறித்ததாகவும் பாம்பு கல்லில் சுற்றிக் கொண்டதாகவும் கருடன் மற்றைய கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் கடல் வழியாக படகு மூலம் வந்த வணிகச் செட்டியார் அந்தக் காட்சியைக் கண்டு அம்மனை நோக்கி மனமுருகி வழிபட்டதாகவும் கருடன் அவ்விடத்தை விட்டு நீங்கியதாகவும் பின்பு நாகம் பூக்களைக் கொண்டு அம்பிகையை வழிபாடு செய்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. ஆலய பெருந்திருவிழா காலத்தில் பதினொராம் திருவிழா அன்று இவ்விரு கற்களுக்கும் பூசை வழிபாடு நடைபெறுகின்றது. அன்றைய தினம் வழிபாடு நடைபெறும் வேளை அப்பகுதியில் கருடன் பறந்து காட்சி தருவதை பக்தர்கள் கண்டு பக்திப் பரவசம் அடைவார்கள். ஆலயத்திற்கு வரும் அடியார்கள் கடல் வழியாக நடந்து சென்று இரு கற்களையும் வழிபாடு செய்து வருகின்றனர். ஆலயத்தின் புனித சின்னமாக இரு கற்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு அமுத சுரபி அன்னதான சபையினர் இரவு-பகல் அன்னதான சேவையை வழங்கி வருகிறார்கள். ஆலய தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தம்பையா தாகசாந்தி நிலையமும் வழமை போன்று தாகசாந்தி சேவையை வழங்கி வருகின்றனர். ஆலய முன்வாயிலில் அபிவிருத்திச் சபையும் தாகசாந்தி சேவையை வழங்கி வருகின்றனர். சாரணர் படை, யாத்திரிகள் தொண்டர் சபை, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, கடல் பாதுகாப்பு சேவை என்பன சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன.

இன்றைய தினம் அம்பிகையின் இரதோற்சவ நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு அவள் அருளாசியை நாடுவோம். அம்பிகையின் தேர்வடம் பிடித்தால் மிகப்பெரிய புண்ணியம் கிட்டும். வடம் பிடித்தவர்கள் அம்பிகையின் திருவடியில் இடம் பிடித்தவர்களாவர். தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தத்திருவிழா அருளலையும் குறிக்கும்.

எல்லோருக்கும்நயினை நாகபூசணித்தாய் நல்லன எல்லாம் தந்தருளவும் நல் வாழ்வெனும் பேற்றினை வழங்கவும் பிரார்த்திப்போம்.

**நயினை விசு.இராசநாயகம்**
**(ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர்)**



இராகம்: இந்தோளம் தாளம் : ஆதி

பல்லவி

ஸ்ரீ ஜெகதீஸ்வரி நயினை நாகேஸ்வரி
சித்தம் இரங்கி அருள் புவனேஸ்வரி
-ஸ்ரீ ஜெகதீஸ்வரி

அனுபல்லவி

ஸ்ரீ சக்கர நிலையே திரியம்பவி
ஸ்ரீ புராந்தகி ஸ்ரீ ஜெகன் மோகினி
- ஸ்ரீ ஜெகதீஸ்வரி

சரணம்

மாயக் கண்ணன் மனமகிழ் சோதரி
மறையவர் போற்றிடும் மந்ர சொரூபினி
தூய நெஞ்சகம் கோயில் கொள் சுந்தரி
சோமசேகரன் துணைவி இராஜேஸ்வரி
- ஸ்ரீ ஜெகதீஸ்வரி

ஆக்கம்: சி.பரராஜசிங்கம், நயினாதீவு.04

### அடைக்கலம் நீயே நாகேஸ்வரி

ஆழி சூழ் நயினையூரில் அமர்ந்தருளும் நாயகியே...
ஊழியாம் காலமெல்லாம் உனைத்தொழுவேன் பூஷணியே..
கோள்தரும் இடர்களையும் கொற்றவையே-இந்த
பாழ்பட்ட மண்ணில் நாம் படும் துயரை பாராயோ...
அலை வந்து தாலாட்டும் சிறு தீவில்
அருளாட்சி புரிகின்ற நாகாத்தா...
சிலை வடிவாயமைந்து சிந்தை தெளிவிப்பவளே-எம்
நிலையறியமாட்டாயோ--- நீக்கிடம்மா எம் துயரை
அலை கடலில் துரும்பாய்-அனலிடையில் புழுவாய்
அல்லலுறுமெமக்கு ஆறுதலை தாராயோ...


கா.தவராஜசுந்தரம்
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# உருமாறிய பலன்



(நேற்றைய தொடர்ச்சி)

அது அவரது கமண்டலத்தின் மீது பட்டு விழுந்தது. சிங்காரமும் "உனக்கு வரும் இந்த ஆபத்தை முன்கூட்டியே அறியாத நீயா நாட்டிற்கு ஆபத்து வரப்போகிறது என்று கூற வந்து விட்டாய்? நீ சொல்வதை எல்லாம் நம்ப இங்கு யாரும்தயாராக இல்லை" என்றான்.

முனிவரும் கீழே விழுந்த கமண்டலத்தை எடுத்துக் கொண்டு "கர்வம் கொண்ட மன்னனால் நாட்டிற்கு நன்மை ஏற்படாது. இது வரப்போகும் ஆபத்தை விட மிக பயங்கரமானது. முதலில் இதைச் சரிப்படுத்துவது என் கடமை. இன்றைக்கு நாலாவது நாள் இந்த இளவரசனை எதிர்க்க ஒரு மாவீரன் வருவான். அவனே அடுத்து வரப்போகும் ஆபத்திலிருந்து இந்த நாட்டைக் காக்கப் போகிறான்" என்று கூறி விட்டு அங்கிருந்து சென்றார். நல்ல வேளையாக முனி வர் சிங்காரத்தைச் சபிக்கவில்லையே என்று சிம்மவர்மன் மகிழ்ந்தான் ஆனால் சிங்காரமோ முனிவரைப் பற்றிச் சற்றும் கவலைப்படவில்லை. முனிவர் அரச சபையிலிருந்து போய் ஒரு கிராமத்தை அடைந்தார். அங்கு ஒரு ஏழையின் வீட்டில் தங்கினார். அப்போது அந்த வீட்டுக்காரன் "எனக்கு வீரையன் என்ற மகன் இருக்கிறான். அவன் எதைக் கண்டாலும் பயப்படுவான். ஆனால் பேசுவது என்னவோ பெரிய வீரன் போலத்தான். அவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று தெரியவில்லை. தாங்கள் தாம் அவனைத் திருத்த வேண்டும்" என்று வேண்டினான்.

முனிவரும் "அவனை என்னோடு அனுப்பு. நான் சரிப்படுத்துகிறேன்" எனக் கூறினான். அந்த ஏழையும் அதற்குச் சம்மதித்து வீரையனை அவருடன் அனுப்பினான். முனிவர் அவனிடம் "நான் சொன்னபடி நீ செய்தால் உனக்கு மாபெரும் வீரன் என்ற பெயரும் கிடைக்கும். நீயும் அதற்காக கொஞ்சமும் சிரமப்பட வேண்டாம். நீ கத்தியைப் பிடித்துக் கொண்டு ஒரு சில விநாடிகளே தைரியமாக நிற்க வேண்டும். இப்படி நின்றால் நீ மறுபடியும் எப்போதும் சண்டை போடும் வாய்ப்பே வராது. இந்தச் சண்டையில் உன்னை எதிர்ப்பவனால் உன்னை அடித்து வீழ்த்தவோ காயப்படுத்தவோ முடியாது. அவன் தோற்று விடுவான். இதற்குப் பின் நீ சுகமாக வாழலாம்" என்றார். வீரையனும் அவர் சொல்கிறபடி செய்வதாகக் கூறினான். முனிவர் வீரையனை அழைத்துக் கொண்டு நான்காவது நாள் சிம்மவர்மனின் சபைக்குப் போய் "மன்னா முள்ளுக் காட்டின் எல்லையிலுள்ள கிராமத்தில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. அதில் சில உயிரற்ற உடல்கள் உள்ளன. அவற்றில் பல சக்திகள் உள்ளன. (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கண்ணகிக்குக் கோயில்



"கண்ணகிக்கு ஒரு கோயில் எழுப்பும் ஆர்வம் இப்போது என க்கே இருக்கிறது" என்றான் செங்குட்டுவன்.

நல்ல விடயங்களைத் தள்ளிப் போடக் கூடாது. உடனே தொடங்குங்கள். கண்ணகியின் உருவத்தைச் செதுக்கச் சாதாரணக்கல் போதாது. இமயத்தில் கல்லெடுத்து, அதைக் கங்கையில் நீராட்டி அந்தக் கல்லில்தான் கண்ணகியின் உருவத்தை வடிக்க வேண்டும். நாம் எழுப்பும் கோயிலுக்கு எல்லாச் சிறப்புகளும் இருக்க வேண்டும். வரலாற்றுச் சிறப்பு, கலைச் சிறப்பு, கட்டடச் சிறப்பு, கற்புச் சிறப்பு. இன்னும் பல.

சரியாகச் சொன்னீர்கள். சேர வம்சமே இதனால் சிறப்படைய வேண்டும்.

சாத்தனாரே! கோவலன் வேறு பெண்ணுடன் உறவு ஏற்பட்டுப் பிரிந்ததையும், அதைக் கண்ணகி எவ்விதம் எதிர்கொண்டாள் என்பது குறித்தும் நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர் கள். அப்போது சேவகன் வந்து குறுக்கிட்டான். இப்போது தொடர்ந்து சொல்லுங்கள்.

இப்போது வேண்டாம்.

"ஏன்?"

"அது சற்று விளக்கமாக விவாதிக்க வேண்டிய விடயம். இப்போது உங்களுக்கு அதிக [illegible] இல்லை. உடனே வடநாடு புறப்பட வேண்டும்.

அதனாலென்ன? இதில் அவசரம் ஒன்றும் இல்லையே! கொஞ்ச நாள் கழித்துப் புறப்பட் டால் போகிறது

இல்லை மன்னா, இது இளவேனிற் காலத்தின் இறுதி. அடுத்து வரப் போவது மாரிகாலம். அதையடுத்து வாடைக் காலம், மழையிலும் குளிரிலும் படையை நடத்திப் போவீர்களேயானால் வீரர்களின் உடல் நலம் கெடக்கூடும். படைகளைத் தயார் செய்யவும், பயிற்சிகள் எடுக்கவும் சிறிது காலம் தேவைப்படும். இந்த நிமிடம் தொடங்கினால்தான் சரியாக இருக்கும். இல்லை யென்றால் இன்னும் ஓராண்டு ஆகும்.

"சாத்தனாரே, உமக்கு அமைச்சராக இருக்க அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன.

பதவி என்பதே தொல்லை பிடித்தது. வேண்டாத பழிச் சொற்கள் வந்து சேரும், ஒரு முறை சுவைத்து விட்டால் மதுவை விடக் கொடுமையாக நம்மைப் பற்றிக் கொள்ளும். நான் ஆலோசகனாகவே இருந்து விட்டுப் போகிறேன். அரசே இமயத்திலிரு ந்து கல்லைக் கொண்டு வருவதற்குப் படைகள் எதற்கு" என்றார். அமைச்சர் ஒருவர்.

படைகள் போருக்கு மட்டும்தான் அவசியமா? ஒரு பொதுவான பாதுகாப்புக்குக் கூட அவை தேவைப்படும். நாட்டை விட்டுப் பல நூறு காத தூரம் போக வேண்டியிருக்கும் போது எதிர்ப்புகள் எந்த வடிவத்திலும் வரலாம். வடக்கில் இருக்கும் மன்னர்கள் நமக்கு வரி செலுத்தும் குறுநில மன்னர்கள் அல்ல. அவர்கள் நம் திட்டத்துக்குச் சம்மதிக்காமல் போகலாம். சண்டைக்கு வரலாம்.

மிகச் சரியாகச் சொன்னீர்கள் சாத்தனாரே. ஆம் எனக்கு முழுமையான படைபலம் தேவையாயிருக்கிறது. அமைச்சரே, ஒரு போருக்குப் புறப்படுவதுபோல் படைகளைத் தயார் செய்யுங்கள்.

அமைச்சர் புறப்பட்டார். அதேசமயம் சேரனுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான். மிகச் சுவாரஸ்யமாக ஆரம்பித்த கதையை சாத்தனார் சொல்லாமல் நிறுத் திக் கொண்டு விட்டாரே!

அந்தக் கதையை வேறொருவர் மூலம் விரைவில் தான் அறியப்போவது தெரிந்திருந்தால், அவன் இன் னும் திருப்தியாகப் புறப்பட்டிருப்பான்.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதய பூர்வமாகவும் செய்யப்பட்டவையே! – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டின் இன்றைய சூழ்நிலையில் நாம் எடுக்க வேண்டிய முடிவு என்ன?

இலங்கையின் இன்றைய ஆட்சியானது ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளிலேயே இருக்கிறதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தாலும் புதிய அரசாங்கத்தை அமைப்பதும் அந்த அரசாங்கம் இயங்குவதும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளிலேயே உள்ளது.

அதாவது நாட்டின் புதிய ஜனாதிபதி யார்? பிரதமர் யார்? என்பதைப் பாராளுமன்றத்தாலோ அன்றி அரசியலமைப்பாலோ தீர்மானிக்க முடியாத அளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் கை ஓங்கியுள்ளது.

எனவே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதாக இருந்தால், அதனை ஆர்ப்பாட்டத்தின் தலைமைக்காரர்கள் தீர்மானித்தால் மட்டுமே அது நின்று நிலைக்கும்.

இதனை நாம் கூறும்போது ஆர்ப்பாட்டத்தின் தலைமைக்காரர்களை இனங்காண முடிகிறதா?

அல்லது இப்போது ஜனாதிபதி மாளிகையில் இருந்து கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளாகத் தங்களை வெளிப்படுத்திக்கொண்டு கருத்துரைப்பவர்கள்தான் மக்கள் புரட்சியின் ஏற்பாட்டாளர்களா? அல்லது இன்னொரு பலமான சக்தி மறைகரமாக இயங்குகிறதா? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

மேற்போந்த கேள்விகளுக்கான எமது பதில் மௌனமாகவே இருக்கும்.

ஆனாலும் இந்தநாட்டின் ஜனாதிபதி, பிரதமர் என்ற ஆளும் தரப்பை நிர்ணயிக்கின்ற அதிகாரம் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் மட்டுமே இருக்கிறது என்பது நிறுதிட்டமான உண்மை.

இதனை மறந்து எவராலும் எதுவும் செய்ய முடியாது. அவ்வாறு செய்தால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் நடந்த அதேகதிதான் புதியவர்களுக்குமாக இருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, நாட்டின் இன்றைய அரசியல் நிலைமை, கொடுங்கோல் ஆட்சியினரை வெளியேற்றுவதன் பொருட்டு தென் பகுதியில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சி மற்றும் சர்வகட்சி அரசாங்கம் என்ற முன்மொழிவு ஆகிய இன்றைய களநிலையில் தமிழர்களின் நிலைப்பாடு என்ன? அவர்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் யாது என்பன குறித்து ஆராய்வது அவசியமாகிறது.

இதனையே கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்; அனைத்துத் தமிழ் அரசியல் தரப்புகளும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பேதங்களை மறந்து ஒன்றுகூடி இன்றைய கட்டத்தில் தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன என்பதை ஆராய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஆம், காலம் உணர்ந்து கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் முன்வைத்த கருத்தை அனைத்து சமய, சமூக அமைப்புகளும் வலியுறுத்துவதுடன் தமிழ் அரசியல் தரப்புகளும் அதுவிடயத்தில் அதீத கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் நம் அவசர கோரிக்கை.

## ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவளித்த பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்திற்கு ஆதரவாக ஹைலெவல் வீதியால் வந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக மஹரகம நகருக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று அதிகாலை கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் கூரிய ஆயுதத்துடன் நுழைய முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பொலிஸ் போக்குவரத்து பிரிவிற்குட்பட்ட தொழில்நுட்ப பொலிஸ் சார்ஜண்ட் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ம)

## சபாநாயகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சபாநாயகரின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள விசேட அதிரடிப் படையினருக்கு மேலதிகமாக மேலும் விசேட அதிரடிப் படையினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி சபாநாயகரின் வீடு மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் ஆகியவற்றுக்கு மேலதிக சிறப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினருக்கு மேலதிகமாக பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் கூறுகின்றன. (ம)

## தென்மராட்சியில் இருவருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சியின் அல்லாரை, கைதடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்கள் இருவருக்கும் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து சாவகச்சேரி சுகாதாரத் தரப்பினர் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அதில், நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் எமது பிரதேசங்களில் கொரோனா பரவல் ஆரம்பித்துள்ளமை பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளதால் அதன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சினால் கடந்த காலங்களில் பரிந்துரைக்கப்பட்டிருந்த சுகாதார வழிமுறைகளை, உங்களது நன்மைகருதி மீளவும் பின்பற்றுமாறு அறுவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## எனது வீடு தீக்கிரையாக ரவூப் ஹக்கீமே காரணம்

### ரணில் காட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினாலேயே எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க் தெரிவித்தார்.

"நீங்கள் பதிவிட்டடுவிட்டரே எனது வீடு தீக்கிரையாகக் காரணம்" நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரவூப் ஹக்கீமை கடுமையாகச் சாடியுள்ளார்.

இதனையடுத்து கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பெரும் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆற்றிய உரையின் போதும் இதனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, சர்வகட்சி ஆட்சியொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (ம)

### போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது

## சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம்

### பொலிஸாரிடம் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட எந்தவொரு பிரஜைக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என போராட்டத்தில் ஈடுபட்ட சிவில் ஆர்வலர்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் ஆர்வலர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் பொது மக்களின் எழுச்சி என்றும் இதற்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் ஆர்வலர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி தேவையின்றி பலரின் உரிமைகள் மீறப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் சார்பில் கலந்து கொண்ட சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, கடந்த 9ஆம் திகதி மக்கள் போராட்டத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்னர். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எல்லையில்லா பேரறிவே ஈசுவரன்



❖ மனம் எப்போதும் இரண்டு எல்லைகளுக்கிடையில் செயல்புரிய வேண்டியுள்ளது. எல்லைக்குட்பட்ட ஓர் இடத்தை நாம் கருத்தில் கொள்ளலாம். ஆனால் அந்த எண்ணமே எல்லையற்ற ஆகாசத்தை பற்றிய எண்ணத் தையும் தருகிறது.

❖ கண்களை மூடுங்கள். ஒரு சிறிய வட்ட வெளியை நினையுங்கள். அதை நினைக்கும் பொழுதே அதைச் சூழ்ந்து எல்லையில்லா வட்டவெளியையும் உணர்கிறீர்கள். காலமும் இதைப் போன்றதே. ஒருநொடிப் பொழுதை சிந்திக்க முயலுங்கள். அதை உணரும் போதே எல்லையில்லா காலமும் உங்கள் சிந்தனையில் வருகிறது. அறிவும் இது போன்றதே அது மனிதனிடம் சிறு விதையாக உள்ளது.

❖ அந்தச் சிற்றறிவைச் சுற்றியுள்ள எல்லையில்லா பேரறிவையும் நாம் எண்ண வேண்டியிருக்கிறது. எல்லையற்ற அறிவு இருக்கிறது என்பதை [illegible] அந்த எல்லையில்லா பேரறிவையே [illegible] என்று வேதங்கள் அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை



கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 29

விவசாய உற்பத்தித்திறனை அதிகரிக்க, அவர் ஐந்து அமைச்சகங்களையும் ஒரு மாநிலக் குழுவையும் ஒருங்கிணைத்தார். இருப்பினும் 1986 இன் பிற்பகுதியில் இந்த இணைப்பு தோல்வி என்று ஒப்புக் கொண்டார்.

குறிப்பாக 1986 செர்னோபில் பேரழிவுக்குப் பிறகு குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் தேவை என்று கோர்பச்சேவ் நம்பினார் . அவர் சோவியத் -ஆப்கானிஸ்தான் போரிலிருந்து விலகினார். மற்றும் அணு ஆயுதங்களை மட்டுப்படுத்தவும் பனிப்போர் முடிவுக்கு கொண்டு வரவும் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகனுடன் உச்சிமாநாடுகளில் இறங்கினார். உள்நாட்டில் அவரது கிளாஸ்னோஸ்ட் (glasnost) கொள்கை (கிளாஸ்னோஸ்ட் கொள்கை என்பது "திறந்த தன்மை" என்பதாகும்) பேச்சு மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை மேம்படுத்த அனுமதித்தது.

**குறிப்பாக 1986 செர்னோபில் பேரழிவுக்குப் பிறகு குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் தேவை என்று கோர்பச்சேவ் நம்பினார் . அவர் சோவியத் -ஆப்கானிஸ்தான் போரிலிருந்து விலகினார். மற்றும் அணு ஆயுதங்களை மட்டுப்படுத்தவும் பனிப்போர் முடிவுக்கு கொண்டுவரவும் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகனுடன் உச்சி மாநாடுகளில் இறங்கினார்.**

அவரது ஜனநாயகமயமாக்கல் நடவடிக்கைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸ் என்பன ஒரு கட்சி அரசை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. 1989-90 இல் பல்வேறு கிழக்கு நாடுகள் மார்க்சிஸ்ட் -லெனினிச நிர்வாகத்தை கைவிட்டபோது கோர்பச்சேவ் இராணுவ ரீதியாக தலையிட மறுத்து விட்டார். உள்நாட்டில் வளர்ந்து வரும் தேசியவாத உணர்வு சோவியத் யூனியனை உடைக்கும் என்று அச்சுறுத்தியது. மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கடும்போக்காளர்கள் கோர்பச்சேவுக்கு எதிராக 1991 இல் தோல்வியுற்ற ஒகஸ்ட் சதித்திட்டத்தை ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து, கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதோடு அவரும் தன் பதவியை இராஜினாமா செய்தார்.

20 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியின் மிக முக்கியமான நபர்களில் ஒருவராக பரவலாகக் கருதப்படும் கோர்பச்சேவ் சர்ச்சைக்குரியவர். அமைதிக்கான நோபல் பரிசு உட்பட பரந்த அளவிலான விருதுகளைப் பெற்றவர். பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வருவதில், சோவியத் யூனியனில் புதிய அரசியல் சுதந்திரங்களை அறிமுகப்படுத்துவதில், மற்றும் கிழக்கில் மார்க்சிஸ்ட்-லெனினிச நிர்வாகத்தின் வீழ்ச்சி இரண்டையும் பொறுத்து அவரது முக்கிய பாத்திரத்திற்காக பரவலாகப் பாராட்டப்பட்டார்.

**மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட் கடும்போக்காளர்கள் கோர்பச்சேவுக்கு எதிராக 1991 இல் தோல்வியுற்ற ஒகஸ்ட் சதித்திட்டத்தை ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து, கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதோடு அவரும்தன்பதவியை இராஜினாமா செய்தார்.**

இதற்கு மாறாக அவர் ரஷ்யாவில் சோவியத் வீழ்ச்சியைத் தடுக்காததற்காக அடிக்கடி அவமதிக்கப்படுகிறார், இப் பிளவு ரஷ்யாவின் உலகளாவிய செல்வாக்கைக் குறைத்து பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது.

சோவியத் ஒன்றியத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் (1) விளாடிமிர் லெனின் (1917 - 1922), (2) ஜோசப் ஸ்டாலின் (1922 - 1953), (3) ஜார்ஜி மாலென்கோவ் (1953), (4) நிகிதா குருசேவ் (1953 -1964), (5) லியோனிட் ப்ரெஷ்நேவ் (1964 - 1982), (6) யூரி ஆண்ட்ரோபோவ் (1982 - 1984), (7) கான்ஸ்டான்டின் செர்னென்கோ (1984 - 1985), (8) மிகைல் கோர்பச்சேவ் (1985 - 1991). 1991 இன் பின் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

### சுதந்திரப் பாதையில் உக்ரைன்

சோவியத் யூனியனின் பெருகிவந்த பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராட கோர்பச்சேவ் மேற்கொண்ட முயற்சியின் எதிர்பாராத விளைவுதான் தேசியவாதத்தின் எழுச்சி. 1986 ஆம் ஆண்டு தொடங்கி, கோர்பச்சேவ் தவறான பொருளாதார பெரெஸ்ட்ரோயிகாவிற்கு ("மறுசீரமைப்பு") பிரசாரத்தைத் தொடங்கினார். மற்றும் உண்மையான பிரச்சினைகள் அல்லது கிளாஸ்னோஸ்ட் ("திறந்த தன்மை") ஆகியவற்றுடன் நேர்மையான மோதலுக்கு அழைப்பு விடுத்தார். ரஷ்யரல்லாத குடியரசுகளில் இந்தக் கொள்கைகள் பொருளாதாரம் மட்டுமல்ல, முக்கியமாக தேசிய அக்கறையும் குரல் கொடுக்க வாய்ப்பைத் திறந்தன.

பால்டிக் மற்றும் டிரான்ஸ்காசியன் குடியரசுகளில் (Baltic and Transcaucasian republics) வெகுஜன இயக்கங்களின் விரைவான வளர்ச்சிக்கு மாறாக, உக்ரைனில் கிளாஸ்னோஸ்ட்டால் தூண்டப்பட்ட தேசிய மறுமலர்ச்சி மட்டுமே படிப்படியாக வளர்ந்தது.

**சோவியத் யூனியனின் பெருகிவந்த பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராட கோர்பச்சேவ் மேற்கொண்ட முயற்சியின் எதிர்பாராத விளைவுதான் சோவியத் ஒன்றிய நாடுகளின் தேசியவாதத்தின் எழுச்சி.**

1986 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து உக்ரைனிய பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள், முதலில் எச்சரிக்கையுடன், நீண்டகாலமாக தடைசெய்யப்பட்ட தலைப்புகளைப் பற்றி பேசத் தொடங்கின. இந்த செயல்முறை விரிவடைந்து தீவிரமடைந்தாலும், உள்நாட்டில் அதிகாரபூர்வமற்ற குழுக்களின் தன்னிச்சையான உருவாக்கம் முதலில் கீவ் மற்றும் லிவ்வில் (Kyiv and Lviv) 1987 இல் தொடங்கியது.

இது 1988 ஆம் ஆண்டு வெகுஜன அணிதிரட்டலின் எழுச்சியைக் கண்டது. முதலில் பொது ஆர்ப்பாட்டங்கள், ஜூன் முதல் ஒகஸ்ட் வரை லிவிவ் மற்றும் நவம்பரில் கீவ்வில் நடந்தது. தேசிய அமைப்புகள் தோற்றம் பெற்றன. இறுதியாக, உக்ரைனில் தேசிய மறுமலர்ச்சி 1989 இல் வெளிப்படையான அரசியல்மயமாக்கலின் கட்டத்திற்குள் நுழைந்தது.

1987-89 மூன்று ஆண்டுகளில், புதிய தலைவர்கள் தோன்றினர். இவர்களுள் குறிப்பாக ஷெலஸ்ட் காலத்தின் shestydesyatnyky யைச் சேர்ந்த பல கலாசார ஆர்வலர்கள் (சோவியத் புத்திஜீவிகளின் புதிய தலைமுறையின் பிரதிநிதிகள்) மற்றும் முன்னாள் எதிர்ப்பாளர்கள் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர். உக்ரைனிய சமுதாயத்தை ஊக்கப்படுத்திய சிக்கல்களில் மொழி, கலாசாரம் மற்றும் வரலாறு போன்ற பாரம்பரிய கலைகள், மதம் போன்ற மீள் எழுச்சி ஆர்வங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம் பற்றிய புதிய கலைகள் ஆகியவை அடங்கும்.

பாடசாலைகள், வெளியீடுகள் (Publication) மற்றும் மாநில நிர்வாகம் ஆகியவற்றில் ரஷ்யமயமாக்கல் மற்றும் உக்ரைனிய மொழியின் பயன்பாட்டு மந்தமான நிலை ஆகியவை ஆரம்பகால கவனத்தைப் பெற்றன. நீண்டகால மொழிப் போக்குகள் குறித்த அச்சங்கள் 1989 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தரவுகளால் உறுதிப்படுத்தப்பட்டன. இத் தரவுகளின் படி உக்ரைனின் மக்கள் தொகையில் உக்ரைனியர்களின் சதவீதம் குறைந்திருந்தது. தாய் மொழியாக உக்ரைனிய மொழியைக் கொண்டிருந்தோர் தொகை இன்னும் வேகமாக வீழ்ச்சியடைந்திருந்தது. 1989 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் மொழிச் சட்டம் உக்ரைனிய குடியரசின் மாநில மொழியாக உக்ரைனிய மொழிக்கு அதிகாரபூர்வ அந்தஸ்தை முதல் முறையாக வழங்கியது. இது இயற்றப்பட்டதால் இந்த பிரச்சினையின் மீதான விவாதங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன.

**1987-89 மூன்று ஆண்டுகளில், புதிய தலைவர்கள் தோன்றினர். அவர்கள் உக்ரைனிய சமுதாயத்தின் மொழி, கலாசாரம் மற்றும் வரலாறு போன்ற பாரம்பரிய கலைகள், மதம் போன்ற மீள் எழுச்சி ஆர்வங்கள் மற்றும் சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதாரம் பற்றிய கலைகள் ஆகியவை தொடர்பில் போராடத் தொடங்கினார்கள்.**

**1989 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் கொண்டிவரப்பட் மொழிச் சட்டம் உக்ரைனிய குடியரசின் மாநில மொழியாக உக்ரைனிய மொழிக்கு அதிகாரபூர்வ அந்தஸ்தை முதல் முறையாக வழங்கியது.**

உக்ரைனிய வரலாற்றில் விடுபட்ட நிகழ்வுகள் (அதாவது புறக்கணிக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட வரலாற்று நிகழ்வுகள்) நிரப்புவதற்கான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அது புள்ளிவிபரங்கள் பற்றிய பொது விழிப்புணர்வை மீட்டெடுப்பதை நோக்கமாக்க் கொண்டிருந்தது. பழைய வரலாற்று புலமையின் தடைசெய்யப்பட்ட படைப்புகளை மறுபிரசுரம் செய்ய. குறிப்பாக "உக்ரைனிய இனப்படுகொலை" என்று முத்திரை குத்தப்பட்ட 1932-33 பெரும் பஞ்சம், ஸ்டாலின் காலத்தைப் பற்றிய அறிவை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் தீவிரமாகின. ஸ்டாலின் காலத்தில் தூக்கிலிடப்பட்ட அரசியல் கைதிகளின் புதைகுழிகள் பற்றிய புதிய வெளிப்பாடுகள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

வழங்கப்படாத நிலையில் மோட்டார் சைக்கிளை அரச உத்தியோகத்தர்களுக்கான வரிசையில் நிறுத்தி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் எரிபொருளுக்காக காவல் நின்றுள்ளார்.

நேற்றும் பெற்றோல் கிடைக்காமையால் நீண்ட நேரம் வரிசையில் நின்றுவிட்டு இளைப்பாறுவதற்காக நகரசபை முன்பாக உள்ள கடைப் பகுதிக்குச் சென்ற போது குறித்த குடும்பஸ்தர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

வவுனியா, கொக்குவெளி பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வகுமார் (வயது. 44) என்பவரே உயிரிழந்தவராவார். (ம)

## மின் பட்டியல்...

யுவை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை நேற்று முதல் லிட்ரோ நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, இன்று கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க பகுதிகளுக்கும், நாளை ஏனைய இடங்களுக்கும் எரிவாயு கொள்கலன் விநியோகிக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், சமையல் எரிவாயு கொள்கலனைக் கொள்வனவு செய்யும் போது, கடந்த மே மாத மின்சார பட்டியலை வைத்திருத்தல் அவசியமாகும்.

இதன்மூலம் அதிகளவான எரிவாயு கொள்கலனைப் பதுக்கி வைக்கும் செயற்பாட்டைத் தவிர்க்க முடியும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், லிட்ரோ நிறுவனத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் ஊடாக எரிவாயு விநியோகிக்கப்படும் நிலையங்களை அறிந்துகொள்ள முடியும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (ம)

## விநியோகத்தை...

யாழ்ப்பாண மாவட்டத்தின் எரிபொருள் விநியோகத்தினை சீராக்குவதற்கு இணையத்தளம் (bit.ly/3nPMF.vJ) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குறித்த இணையத்தளத்தினை நேரடியாகவோ, இணைக்கப்பட்டுள்ள QR CODE இனை பயன்படுத்தியோ தங்களது ஸ்மாட் தொலைபேசி, கணினி மூலம் எரிபொருளுக்கான கோரிக்கையினை முன்வைக்க முடியும்.

எரிபொருள் கிடைக்கப் பெறும் போது பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான திகதி நேரம் என்பன பதிவு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப்படும்.

பொதுமக்கள் குறித்த நேரத்தில் தங்ளுக்குரிய எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும். குறித்த எரிபொருள் கோரிக்கைக்கான இணையத்தளத்தினை மாவட்டச் செயலக இணையத்தளத்தின் ஊடாகவும் அணுகமுடியும்.

இவ்வாறு QR CODE இனை பயன்படுத்த முடியாதவர்கள் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு இவ் இணையத்தளத்தினை அணுக முடியும் என யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ம-18.33,104)

## அனைத்து அமை...

சர்வகட்சி ஆட்சிக்கு இடமளிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம)

## இலங்கை பொரு...

கடுமையான காலம் என்று நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஊடகப்பிரிவு வெளியிட்ட காணொளியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்திருப்பதாவது,

தமக்கென இருந்த ஒரே ஒரு வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இதில் அதிகமாக அழிந்துபோன சொத்துக்கள் தமது நூல்கள் என்றும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் போர்த்துக்கேயர் காலம் மற்றும் ஒல்லாந்தர் கால நூல்கள் உட்பட 2500 நூல்கள் அதில் இருந்தன. தமது காலத்தின் பின்னர் இந்த நூல்களை நாட்டின் பல இடங்களுக்கும் அன்பளிப்பாக வழங்குவதற்கு தாம் தீர்மானித்திருந்ததாக ரணில் தெரிவித்துள்ளார்.

அதனை விட பழங்காலத்து சித்திரங்கள் இருந்தன. அனைத்தும் முற்றாக எரிந்து விட்டதாகவும், எனினும் தற்போது ஒரேயொரு சித்திரமே தன்னிடம் எஞ்சியுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதற்கிடையில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது, சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமானால், தான் பிரதமர் பதவியில் இருந்து விலகிக்கொள்ள தயார் என்பதை அறிவித்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க காணொளியில் தெரிவித்துள்ளார். (ம)

## தலை...

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட "மொட்டு" அரசின் மக்கள் ஆணை முடிந்துவிட்டது. அவர்கள் இந்த அழகான தீவை அழித்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் நாங்கள் தயார்."

"நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பங்களிக்கவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசை நியமிப்பதற்கு நாம் தயார்.

இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக யாராவது பாராளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயலாகும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் எமக்கு ஒத்துழைக்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.(ம)

## கோட்...

தளபதிகளைச் சந்தித்து கலைந்துரையாடிதன் பின்னர் நாட்டைவிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதாக தவறாக கூறியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சர்வதேச செய்திச் சேவையான ஏஎன்ஐ உடனான தொலைபேசி உரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில், "இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்னும் நாட்டில் இருக்கிறார், நான் (பிபிசி) பேட்டியின் போது தவறு செய்துவிட்டேன்" என்று கூறியுள்ளார். (ம)

## முன்னேற்றத்தை...

அரசியல் ஸ்திரமின்மை காரணமாக இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் தாமதமாகலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்திரமான அரசியல் நிர்வாகத்தின் தேவை, சிறந்த முன்னேற்றத்தை ஏற்படுத்த சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது மற்றும் நிதி மற்றும் எரிபொருள் பற்றாக்குறையை தீர்க்க வேண்டியது அவசியம் என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிடுகிறார்.

இதேவேளை, இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பரிமாற்றம் செய்வதற்கும் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)


### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1290
வெற்றி இலக்கங்கள்: கடகம் 9 2 3 1 7 7
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1291
வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 9 4 7 8 7 4
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத
அச்சிடப்பட்டுள்ள திகதி 2022.07.10 — சீட்டிழுப்பு இலக்கம் 3054
ஆங்கில எழுத்து: W — வெற்றி இலக்கங்கள்: 01 09 38 80
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத
திகதி 2022.07.11 — சீட்டிழுப்பு இலக்கம் 3055
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 42 53 61 62
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
அச்சிடப்பட்ட திகதி 10.07.2022
சீட்டிழுக்கப்பட்ட திகதி 11.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1160
P 06 — வெற்றி இலக்கங்கள்: 37 45 69 72

### ஹந்தஹன (HANDAHANA)
அச்சிடப்பட்ட திகதி 2022.07.10 — சீட்டிழுப்பு திகதி 11.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் 121
விருச்சிகம் 06 19 24 41 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2022/07/11
சீட்டிழுப்பு இலக்கம் 4812
E 2 2 0 5 8 9
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
டிக்கட் அச்சிடப்பட்ட திகதி 10.07.2022
சீட்டிழுக்கப்பட்ட திகதி 11.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் 842
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள்: 39 54 66 79

### தன நிதானய
திகதி - 2022.07.11
சீட்டிழுப்பு இலக்கம் - 843
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள்: 27 32 48 51

### அத கோடிபதி (ADA KOTIPATHI)
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1612/1613/1614
சீட்டிழுப்பு திகதி: 2022.07.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,759,900/-
வெற்றி இலக்கங்கள்: 04 37 38 73 — ஆங்கில எழுத்து P

### சனிதா (Shanida)
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.07.11
சீட்டிழுப்பு இல: 3947/3948/3949
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,800,500/-
வெற்றி இலக்கங்கள்: 16 18 21 51 — ஆங்கில எழுத்து L

### ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,872,054/-
திகதி 2022-07-11
சீட்டிழுப்பு 3498/3499/3500
வெற்றி இலக்கங்கள்: 02 17 22 40
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,312,060/-

### லக்பிம / 12
சீட்டிழுப்பு 962/963/964 — திகதி 2022.07.11 திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: Q 10 18 28 45 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 247,424,353/-
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

### ஜயோதா (Jayoda)
சீட்டிழுப்பு வாரம் 1834 — சீட்டிழுப்பு திகதி 2022-07-11
வெற்றி இலக்கங்கள்: 10 60 63 65 — ஆங்கில எழுத்து G
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 33,898,732/-
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1786/1787/1788
சீட்டிழுப்பு திகதி 2022.07.11 — திங்கட்கிழமை
G 14 36 43 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,613,940/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வகட்சி...

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

ஜூலை மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளமையால் விரைவில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்கே நேற்றைய கூட்டம் நடைபெற்றதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டி சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளதாக அறிவித்து, 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்புமனு கோருவதற்கும் 20ஆம் திகதி புதன்கிழமை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாக்கெடுப்பு நடத்தி புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மற்றுமொரு கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்றைய கூட்டத்துக்கு போராட்டக்காரர்கள் சிலரையும் அழைத்துப் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆட்சியதிகார...

ஊடகங்களுக்கு நேற்று கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தரப்பினரை ஒன்றிணைத்து அரசாங்கத்தை ஸ்தாபிக்க வாய்ப்பளிக்கப்படுமாயின் ஆட்சியதிகாரத்தை ஏற்கத் தயார்.

குறுகிய காலத்திற்கு பின்னர் பாராளுமன்றத்தை கலைத்து தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்ய மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் அரசியல் சூழ்ச்சிகளினால் தெரிவு செய்யப்படக்கூடாது. மக்களினால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12110)

076 825 7716 (ஆகாஸ்)


# கண்ணீர் அஞ்சலி

வலம்புரி பத்திரிகையின் முன்னாள் அலுவலகச் செய்தியாளர்

செல்வி

## அனுசியா மரியநாயகம்

(ஆசிரியர் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)



அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி நிர்வாகம்


வேலை ஆட்கள்
தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
(சிட்டை போடுபவரும் தேவை)

தொடர்புக்கு (12112)
076 659 5578

உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி: பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4569) V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-4569)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777


# கோட்டக்கல்வி அலுவலக
# திறப்பு விழா

திகதி :- 12.07.2022 (செவ்வாய்க்கிழமை)

இடம் :- மகேஸ்வரி வித்தியாலயம்
மட்டுவில் நாடு வாடியடி பூநகரி

நேரம் :- காலை 10 மணி

தலைமை

**திரு.நா.கணேஸ்வரநாதன்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - பூநகரி)

பிரதம விருந்தினர்

**திரு.செ.உதயகுமார்**
(மாகாணக்கல்விப் பணிப்பாளர் - வடக்கு மாகாணம்)

*நிகழ்வு சிறக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பூநகரி கோட்டக்கல்வி சமூகம்

இன்று திறப்பு விழாக் காணும்
கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

பூநகரி சமூகம்,
சரவணப்பொய்கை Inc

(C-4600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.